# இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
இரா.கண்ணன், இ.ஆ.ப,
ஆணையர் (மு.கூ.பொ),
சென்னை-34.

பெறுநர் (மின்னஞ்சல் மூலம்)
அனைத்து மண்டல இணை ஆணையர்கள்
இணை ஆணையர்/செயல் அலுவலர்கள்
துணை ஆணையர்/செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்கள்
உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள்

**ந.க.எண்.66400/2021/இசட் 1/ நாள்.27.05.2022**

ஐயா / அம்மையீர்,

பொருள் : தமிழ்நாடு சட்டப்பேரவை அறிவிப்புகள் 2022-2023 - இந்து சமய அறநிலையத்துறை - அறிவிப்பு எண்.13 - திருக்கோயில்களில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளின் திருமணம் - மணமக்களுக்கு புத்தாடைகள் திருக்கோயில் சார்பாக வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள். 04.05.2022.

-----

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் 2021-2022-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் "மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது மேலும் திருக்கோயிலுக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்பு கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும்". என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் துறையின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு திருமணம் நடைபெற்றால் அதற்கான கட்டணம் வசூலிக்கக்கூடாது எனவும் மற்றும் திருக்கோயில்களுக்கு சொந்தமான திருமண மண்டபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு திருமணம் நடைபெற்றால் பராமரிப்பு கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டு தற்போது மேற்படி அறிவிப்பு அனைத்து திருக்கோயில்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023-ம் ஆண்டின் சட்டமன்ற பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

**அறிவிப்பு எண்.13**

**"திருக்கோயில்களில் நடைபெறும் திருமணங்களில் மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் கட்டணம் ஏதுமின்றி திருக்கோயில் மண்டபங்களில் நடக்கும் திருமணங்களுக்கு வாடகையின்றி திருமணங்கள் நடத்திட அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள திருமணங்களில் மணமக்களுக்கு புத்தாடைகள் திருக்கோயில் சார்பாக வழங்கப்படும்".**

எனவே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் துறையின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் மற்றும் திருக்கோயிலுக்கு சொந்தமான மண்டபங்களில் நடக்கும் மாற்றுத்திறனாளிகள் திருமணங்களில் மணமக்களுக்கு திருக்கோயில் சார்பாக புத்தாடைகள் வழங்கப்பட வேண்டும் என அனைத்து திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் உத்தரவிடப்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதியினை திருக்கோயில் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யவும் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வுத்தரவினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் சார்பு செய்திட மண்டல இணை ஆணையர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பணிகளை தனிக்கவனம் செலுத்தி கண்காணிக்கவும் மண்டல இணை ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-இரா.கண்ணன்
ஆணையர் (மு.கூ.பொ)

/உண்மைநகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

நகல்:

1 – 3) இவ்வலுவலக எச், ட்டி, யு பிரிவுகள் (எண்ணிடல் மூலம்)

4. மிகை